வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – சரவணகுமார்

தேதி 3.8.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

உத்தரபிரதேச மாநிலம் கோண்டாவில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ரயில்வேத் துறை கடந்த 11 ஆண்டுகளில் மிகப் பெரிய மாற்றங்களை கண்டுள்ளதாக மத்திய ரயில்வேத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஆடி பெருக்கு விழா இன்று விமர்சையாக கொண்டாடப்படுகிறது.

சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் 220 ஆவது நினைவு தினத்தை ஒட்டி, பல்வேறு தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

*பிரதமர் (9)*

உத்தரபிரதேச மாநிலம் கோண்டாவில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இந்த விபத்தில் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு பிரதமர் சமூக ஊடகப் பதிவில் வருத்தம் தெரிவித்துள்ளார். காயம் அடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிராத்திப்பதாக பதிவிட்டுள்ளார். உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்தினருக்கும் பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து 2 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும், காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

கொடி (12)

மூவர்ணக் கொடியை இல்லந்தோறும் பறக்க விடுவதன் மூலம் ஹர் கர் திரங்கா இயக்கத்தை வலுப்படுத்துமாறு நாட்டு மக்களை பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார். நாடு சுதந்திரம் அடைந்து 76 ஆண்டுகளை கொண்டாட உள்ள நிலையில் இல்லந்தோறும் தேசிய கொடி ஏற்றும் இயக்கம், வரும் 15ஆம் தேதி வரை, நடைபெற உள்ளதாக மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. 2022-ஆம் ஆண்டு தொடங்கிய இந்த இயக்கத்தில் 23 கோடி வீடுகளில் தேசிய கொடி

ஏற்றப்பட்டதாகவும், 6 கோடி பேர் செல்ஃபி எடுத்து இணைய தளத்தில் பதிவிட்டுள்ளதாகவும், 2023-ல் 10 கோடி பேர் வீடுகளில் தேசிய கொடி ஏற்றியபடி செல்ஃபி எடுத்து பதிவிட்டுள்ளதாகவும், அமைச்சகம் கூறியுள்ளது. இந்த ஆண்டும் இந்த நடைமுறையை சிறப்பிக்க வேண்டுமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

*அஸ்வினி வைஷ்ணவ்* (10)

நாட்டின் ரயில்வேத் துறை கடந்த 11 ஆண்டுகளில் மிகப் பெரிய மாற்றங்களை கண்டுள்ளதாக மத்திய ரயில்வேத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். குஜராத் மாநிலம் பாவ் நகர் ரயில் நிலையத்தில் இருந்து, பாவ்நகர்-அயோத்யா கண்ட் வாராந்திர ரயில் சேவையை நேரடியாகவும், ஜபல்பூர்-ராய்பூர் மற்றும் ரேவா-பூனே இடையேயான இரண்டு புதிய ரயில் சேவைகளை காணொளி வாயிலாகவும் இன்று தொடக்கி வைத்து பேசிய அவர், நாடு முழுவதும் ஆயிரத்து 300 ரயில் நிலையங்கள் மறு சீரமைக்கப் பட்டுள்ளதாக கூறினார். மேலும், ரயில்வேத் துறையை நவீனப் படுத்துதல், பாதுகாப்பு மற்றும் தூய்மையை பராமரிப்பதில் மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக தெரிவித்தார்.

ஆடி பெருக்கு 1 (7)

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஆடி பெருக்கு விழா இன்று விமர்சையாக கொண்டாடப்படுகிறது. காவிரி பாயும் மாவட்டங்களில் உழவு தொழில் செழிக்க வேண்டி பொதுமக்கள் அதிகாலை முதலே நீர் நிலைகளில் கூடி, காவிரி அன்னைக்கு காப்பரிசி, காதோலை கருகமணி, காய்கறிகள், மலர்கள் உள்ளிட்ட மங்கல பொருட்களை சமர்பித்து வழிபடுகின்றனர். புதுச்சேரியில் உள்ள பாகூர் ஏரியில் ஆடிபெருக்கு விழா சிறப்பாக நடைபெற்றது. இது குறித்த செய்தித் தொகுப்பு……

(வாய்ஸ் )

ஆடி பெருக்கு 2 (17)

வாய்ஸ்

புதுச்சேரியின் 2-வது பெரிய ஏரி பாகூர் ஏரி. 1,000 ஆண்டுகளுக்கும் மேல் பழமை வாய்ந்தது. இந்த ஏரியின் மூலமாக பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்று வந்தன. இந்த ஏரிக்கு பருவ மழை பெய்தால் மட்டுமே தண்ணீர் நிரம்பும் என்ற நிலை இருந்தது. இதனால், மன்னர் காலத்தில் வாழ்ந்த நாட்டிய சகோதரிகளான பங்காரி, சிங்காரி பாகூர் ஏரிக்கு மழை இல்லாத போதும் தண்ணீர் கொண்டு வர முடிவு செய்தனர்.

இதற்காக, தென்பெண்ணையாற்றின் குறுக்கே உள்ள சொர்ணாவூரில் இருந்து, பங்காரியின் முயற்சியால் 14 கிலோ மீட்டர் நீளத்திற்கு வாய்க்கால் வெட்டி, பாகூர் ஏரிக்கு தண்ணீர் கொண்டு வரப்பட்டது. அதேபோல், அவரது சகோதரியான சிங்காரியின் முயற்சியால், தூர்ந்து கிடந்த பாகூர் ஏரி தூர்வாரி ஆழப்படுத்தி கரை சீரமைக்கப்பட்டது. பாகூர் ஏரிக்கு தண்ணீர் கொண்டு வந்த பங்காரி, சிங்காரி சகோதரிகளை நினைவுகூரும் வகையில் அவர்கள் நடனம் ஆடுவது போன்ற கருங்கல் சிற்பம், பாகூர் ஏரியின் உபரி நீர் வெளியேறும் அரங்கனூர் களிங்கல் பகுதியில் உள்ளது. இங்கு, வாரம்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் பொதுமக்கள் சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டு வருகிறார்கள். இங்கு ஆண்டுதோறும் ஆடிப்பெருக்கு விழா விமரிசையாக நடைபெறும்.

ஆடி பெருக்கு 3 (7)

அதன் படி, ஐந்தாம் ஆண்டு ஆடிப்பெருக்கு விழா மேள, தாளங்கள் உள்ளிட்ட மங்கல வாத்தியங்கள் முழங்கிட மஞ்சள், சந்தனம், பால், தயிர், இளநீர், பன்னீர் உள்ளிட்டவைகளால் பங்காரி, சிங்காரிக்கு சிறப்பு அபிஷேகம் செய்து, ஊரணி பொங்கல் வைத்து தீபாராதனை நடத்தி ஏராளமான பெண்கள் வழிபட்டனர். இதில் அரங்கனூர், சேலியமேடு,

பாகூர், நிர்ணயப்பட்டு உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

*தீரன் சின்னமலை* (8)

சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் 220 ஆவது நினைவு நாளை ஒட்டி, சென்னையில் உள்ள அவரது திரு உருவ சிலைக்கு தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், அம்மாநில அமைச்சர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர். மேலும், மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், அன்னாரது திரு உருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நாளை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், இந்திய சமுதாயத்திற்கு அளப்பறிய பணியாற்றியவர் தீரன் சின்னமலை என்று பெருமிதம் தெரிவித்தார்.

*ஆயுர்வேத ஆஹாரா* (17)

இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிலைகள் ஆணையம், ஆயுஷ் அமைச்சகத்துடன் இணைந்து ஆயுர்வேத ஆஹாரா பிரிவின் கீழ், ஆயுர்வேத உணவு தயாரிப்புகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் உணவு பாதுகாப்பு மற்றும் தர நிலைகள் விதிமுறைகள்

அறிமுகப்படுத்தப் பட்டதை தொடர்ந்து, இந்த குறிப்பிடத் தக்க நடவடிக்கை இந்தியாவில் காலம் காலமாக மதிக்கப்படும் உணவின் மீதான புரிதலை கொண்டு வருகிறது. இந்த விதிமுறைகள் அதிகாரபூர்வ ஆயுர்வேத நூல்களில் இருந்து சமையல் குறிப்புகள், பொருட்கள், மற்றும், செயல்முறைகளை அடிப்படையாக கொண்ட உணவுகளை அங்கீகரிக்கின்றன. ஆயுஷ் அமைச்சகம் மற்றும் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தின் இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் குடிமக்கள் ஆயுர்வேத ஆஹாராவை தங்கள் அன்றாட வாழ்வில் இணைத்து அதன் நீண்ட கால சுகாதார நன்மைகளை அனுபவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இந்த காலத்தில் சோதிக்கப்பட்ட உணவு முறைகள் உடலை வளர்ப்பது மட்டும் அல்லாமல், நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துகின்றன. மேலும், செரிமானத்தை ஆதிகரித்து ஒட்டுமொத்த நல்வாழ்வை மேம்படுத்துகின்றன என்று அவர் கூறினார்.

*மாணவர் சேர்க்கை* 1 (3)

இந்திராகாந்தி தேசிய திறந்த நிலை பல்கலைக் கழகத்தில் ஜூலை 2025 மாணவர் சேர்க்கைக்கான கடைசி நாள் ஆகஸ்ட் 15 வரை நீட்டிக்கப் பட்டுள்ளது. இது குறித்த விரிவான தகவல்........

(வாய்ஸ் )

மாணவர் சேர்க்கை 2 (14)

(வாய்ஸ் )

தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று குழு மூலம் A++ தர அங்கீகாரம் பெற்று இந்திய அரசின் கல்வித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் இந்திராகாந்தி தேசிய திறந்த நிலை பல்கலைக் கழகம் இக்னோ வில் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு ஜூலை 2025 மாணவர் சேர்க்கைக்கான கடைசி நாளாக ஆகஸ்ட் 15 ஆம் தேதி வரை நீட்டிக்கப் பட்டுள்ளது. இளங்கலை, முதுகலை, டிப்ளமோ மற்றும் சான்றிதழ் உள்ளிட்ட அனைத்து படிப்புகளிலும் சேர விரும்பும் மாணவர்கள் ignouadmission.samarth.edu.in மற்றும் ignouiop.samarth.edu என்ற இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் தகுதி உள்ள அட்டவணை இனத்தை சேர்ந்த மாணவர்களுக்கு 50 சதவிகிதம் கட்டணத்தில் விலக்கு அளிக்கப்படும் என்றும் இக்னோ பல்கலைக் கழகத்தின் முதுநிலை மண்டல இயக்குநர் முனைவர் கே பன்னீர் செல்வம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கடல்பாசி (9)

புதுச்சேரி அரசு, ராமேஸ்வரம் மத்திய கடல் மீன் வள நிறுவனத்துடன் இணைந்து, கடல்பாசி வளர்ப்பு திட்டத்தை தொடங்கி உள்ளது. புதுச்சேரி காரைக்காலில் தலா 2 இடத்தில் கடல்பாசி பயிரிடப் பட்டுள்ளது. மேலும் 23 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது. 50 லட்ச ரூபாயில் கடல்பாசி வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. புதுச்சேரியில் புதுக்குப்பம், பனித்திட்டு, காரைக்காலில் கருக்கலாச்சேரி, பட்டினச்சேரி ஆகிய 4 இடங்களில் சோதனை அடிப்படையில் கடல்பாசி சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வருகின்ற அக்டோபரில் முதன் அறுவடை செய்யும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது.

*ரயில் ரத்து* (9)

புதுச்சேரி-விழுப்புரம் இடையே தினமும் காலை 5.25 மணிக்கு இயக்கப்படும் மெமு ரயில் சேவை வரும் 6 ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி வரை ரத்து செய்யப்படுவதாக திருச்சி ரயில்வே கோட்ட அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. விழுப்புரம், திருச்சி உள்ளிட்ட பல்வேறு ரயில் நிலையங்களில் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருவதால் இந்த ரயில் ரத்து செய்யப்படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும், சென்னை எழும்பூரில் இருந்து புதுச்சேரிக்கு தினமும்

காலை 6.35 மணிக்கு இயக்கப்படும் மெமு ரயில் வரும் 10, 12 ஆகிய தேதிகளில் 15 நிமிடங்கள் காலதாமதம் ஆகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*புதுச்சேரி பல்கலைக் கழகம்* (7)

இந்திய அரசின் திறன் மேம்பாட்டு ஆணையம் மற்றும் புதுச்சேரி பல்கலைக் கழகம் இணைந்து 3 நாள் முதன்மை பயிற்சியாளர் பயிலரங்கத்தை நடத்தியது. பயிலரங்கினை பல்கலைக் கழக துணை வேந்தர் திரு பிரகாஷ் பாபு தலைமை தாங்கி தொடக்கி வைத்தார். பல்கலைக் கழக மானியக் குழு இணை செயலாளர் டாக்டர் ஜிதேந்திர குமார் திரிபாதி, திறன் மேம்பாட்டு ஆணைய இணை செயலாளர் டாக்டர் தீக்ஷா ராஜ்புட் பயிற்சியின் நோக்கங்கள் குறித்து விளக்கினர்.

வானிலை (6)

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, வரும் 7-ஆம் தேதி வரை, தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சூறாவளி காற்றுக்கு

வாய்ப்புள்ள தமிழக கடலோர பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

விளையாட்டு (8)

அர்ஜென்டினா கால்பந்து அணியின் நட்சத்திரமான லியோனல் மெஸ்சி வரும் டிசம்பர் மாதம் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து, கொல்கத்தா, மும்பை, அகமதாபாத், டெல்லி உள்ளிட்ட 4 நகரங்களில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். இந்த பயணத்தின் போது பிரதமர் திரு நரேந்திர மோடியையும் மெஸ்சி சந்திக்க உள்ளார். லியோனல் மெஸ்சி கலந்து கொள்ளும் நிகழ்ச்சிக்காக மும்பையில் உள்ள வான்கடே மைதானத்தை முன்பதிவு செய்வது உட்பட அனைத்து ஏற்பாடுகளும் நடைபெறுவதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.